சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 392/2015**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
வாக்குமூலம் – வா.சா–2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | தாராபுரம் | நாள் | : | 10.08.2023 |

1987 ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023 ஆண்டு ஆகஸ்ட் 10 ம் நாள் சாட்சியம்.

---

**அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜராகி முதல் விசாரணை பதிவு செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

. தாவா சொத்தின் காலை எண்.266/3 ஆகும். தாவா சொத்தில் செங்கல் சூளை இல்லை. வாதி பூமி 77 1/2 செண்ட் விஸ்தீரணம் உடையது ஆகும். வாதி ஆறுமுகம் என்பவரிடமிருந்து மேற்படி பூமியை கிரையம் பெற்றுள்ளார். வாதி மேற்படி பூமியில் தான் வீடு கட்டி குடியிருக்கிறார். வாதி பூமியில் மேல்புறமும், வடபுறமும் தென்னை மரங்கள் உள்ளது. வாதி பூமிக்கு கிழபுறமாக எனது பூமி உள்ளது. மேல்புறம் கந்தசாமிகவுண்டரின் பூமி உள்ளது. வாதி பூமிக்கு வடபுறம் கோவிந்தராஜ் பூமி உள்ளது. வாதி தனது பூமிக்கு பைபாஸ் வழியாக சென்று கொள்வார், கிழபுறத்தில் மண்திட்டு உள்ளது அதன் வழியாகவும் செல்வார். மேற்படி மண்திட்டு தடம் 3 அடி இருக்கும்.

**முதல் விசாரணை முடிவடைந்தது**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தாராபுரம்.